Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வருஷ ஆனிமீ உஅஉ (1943 ஜுலைமீ 12 திங்கட்கிழமை) [இல. உஎ

## சிஸிலியை ஐக்கிய ராச்சியத்தினர் தாக்கலாயினர்

எயிலன் கோர் என்னும் சேனுபதியின் தலைமையில் ஐக்கியதத்துவ ராச்சியத்தினர்க்குரிய படை இத்தலிக்குச் சேர்ந்த சிசிலித்தீவைத் தாக்கும்படி போய் இறங்கிவிட்டதாம். இச்சைநியத்தில் பிரித்தானிய அமெரிக்க கனடிய போர்வீரர் கலந்திருக்கின்றனராம். முதல் இத்தீவு ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரின் ஆகாயப் படை கொண்டு தாக்கப்பட்டதாம். அதன்பின்னர்த் தானும் சைநியம் அத்தீவிற்சென்று இறங்கியது. கடற்படையுந் துணையாக நிற்கின்றதாம். இத்தலைய ஜர்மனிய படைகள் ஐக்கிய தத்துவ சைநியத்தை முன்னேற வொட்டாது தடுத்துக் கடுஞ்சமர் புரிந்தபோதும் இவர்கள் ஒருவாறு முன்னேற முயல்கின்றனரெனச் சொல்லப்படுகின்றது.

## பகைவரின் பிரதானங்கள் தகர்க்கப்பட்டன

ஐக்கிய ராச்சியப்படைகள் சிசிலியிலுள்ள, பகைவர்க்குரிய அரண் செய்யப்பட்ட தானங்களையும் தபாலாபீசு தெலிபோன்தானம் முதலியவற்றையுஞ் சிதைத்துவிட்டனவாம்.

## ஜர்மனியர் கூற்று

சனிக்கிழமை தொடக்கம் சிசிலியிலே கரைப்பாகங்களிற் கோரமான யுத்தம் நடக்கின்றது; பகைவர் வந்திறங்கிய சில கப்பல்கள் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

## நேரு சகோதரி குமாரிகளுக்கு விருந்து

நியூயார்க் யூலை 9—

அமெரிக்காவிலுள்ள இந்தியா லீக், பண்டிட் ஜவஹர்லால் நேருவின் சகோதரியின் குமாரிகளுக்கு இங்கு இன்றிரவு நியூயோர்க் இந்தியன் ரெஸ்டாரெண்டில் ஓர் விருந்தளித்தது. இந்திய வர்த்தகக் கமிஷனர் திரு. மாலிக் அவரது மனைவி முதலியோரும் விருந்துக்கு விஜயம் செய்திருந்தனர். மொத்தம் 50 விருந்தினர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

## ஜப்பான்மீது புதிய தாக்குதல்

லண்டன் யூலை 10—

ஐக்கிய அமெரிக்க விமானப்படைகள் ஜப்பான் பிரதேசத்தின்மீது புதிய தாக்குதலை ஆரம்பிக்கத் திட்டம்போட்டுக் கொண்டிருப்பதாக ஜெர்மன் ரேடியோ இன்று தெரிவிததது.

# இன்றையஇந்தியாவை நன்கறிந்தவர்

## வைகௌண்ட் வேவலுக்கு ஸேர். பிரடெரிக் பாராட்டு

லண்டன் யூலை 8—

கிழக்கிந்திய சங்க வருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசும்போது ஸேர். பிரெடரிக் ஸைக்ஸ் அச்சங்கத்தின் ஒரு அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் வைகௌண்ட் வேவலுக்கு செப்டம்பர் மாதம் 21-ந் திகதி ஒரு பிரிவுபசாரம் நடத்தப்படுமென்று தெரிவித்தார். முக்கியமான இச்சந்தர்ப்பத்தில் இன்றைய இந்தியாவைப்பற்றி பூரணமாக அறிந்திருக்கும் ஒருவரை இந்தியாவுக்கு வைஸ்ராயாக அனுப்பப் பிரிட்டன் முன்வந்தது பாராட்டக்கூடிய ஒன்ருகுமென்றும் அவர் கூறினர்.

ஸேர் பிரெடரிக் ஸைக்ஸ் லின்லித்கோ பிரபுவைப் புகழ்ந்து பாராட்டினர்.

நெருக்கடியான நிலைமையிலும் யுத்த முயற்சிக்காகப் பூரண ஆதரவையும் தைரியமாகத் திரட்டி இந்தியாவின் அரசியல் அபிவிருத்திக்கு லின்லித்கோ பிரவு அஸ்திவாரமிட்டது அவருடைய துணிவையும் நல்லெண்ணத்தையும் காட்டுவதாகவும் அவர் எப்போதும் தொடை நடுங்கியாக இருந்ததே கிடையாதென்றும் அவருடைய சொந்த நாட்டு மக்களால் மட்டுமன்றி இந்திய மக்களாலும் அவர் பாராட்டப்படத் தகுதியுடையவரென்றும் ஸேர். பிரெடரிக் கூறினர்.

சில தினங்களில் இந்தியாவுக்குப் பிரயாணமாகவிருக்கும் ஸேர் இராமசாமி முதலியார் அடுத்ததாகப் பேசும்போது, தான் இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்தில் ஆங்கில மக்கள் இந்தியா சம்பந்தமாகக் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்குமாகத் தான் அவர்களுக்கு ஆழ்ந்த நன்றி தெரிவிப்பதாகவும் ஆங்கிலேயர்களிடையே அந்த மனப்பான்மையை வளர்ப்பதில் இந்தச் சங்கந்தான் முக்கிய பங்கெடுத்துக்கொண்டதென்றுங் குறிப்பிட்டார்.

### சிரமமான வேலை

யுத்தமுடிவில் சுதந்திரநாடுகளின் சமஷ்டி யொன்றை அமைப்பது தான் பிரிட்டன் நெடுங்காலமாகக் கொண்டிருக்கும் அபிப்பிராயமென்றும் ஆனல் இது இந்தியாவின் நிலைமையைப் பொறுத்திருக்கிறதென்றும் பழையபம்பாய்க்கவர்னர் ஸேர் ரொஜர் லம்லி பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தியாவிலிருக்கும் முக்கிய கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு தனி இந்திய சமுதாயத்தைச் சிருஷ்டிப்பது மகத்தான ஒருவேலையாகும். ஆனல், தற்போது இந்தியாவிலிருந்து வரும் பிரிவினை இந்தியத் தலைவர்களுக்கு இந்த வேலையைக் கஷ்டமானதாக ஆக்கியிருக்கிறது. இந்தியாவுக்கு பிரிட்டன் ஏற்கனவே அளித்திருக்கும் லட்சியத்தை அடைவதற்காக பிரிட்டன் அதற்கு நல்லெண்ணத்தோடு வேண்டிய உதவிகளையும் செய்யவிரும்பும்"

தொடர்ச்சி 6 ம் பக்கம்

# அபிமானிகளுக்கு ஓர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையானது உற்பத்தியான நாள் தொடக்கம் இற்றைவரையில் இங்குள்ள தமிழ் மக்கள் பொருட்டுப் பொதுவாகவும் சைவமக்கள் பொருட்டுச் சிறப்பாகவும் பல்லாற்ருனும் உழைத்து வருகின்றது, இச்சபையார் செய்துவரும் பலதிறப்பட்ட முயற்சிகளுள் இவர்கள் பிரசுரித்துவரும் ஆங்கில தமிழ் இந்துசாதனப் பிரசுரங்களும் சைவப் பிள்ளைகளுக்குரிய பாலபாடங்கள், ஏனைய புத்தக வெளியீடுகள் ஆகிய இவைகளுமே பிரதானமானவை. ஆனல் சில வருடங்களாகச் சபையாருடைய பத்திரிகைப் பிரசுரங்களிரண்டும் நஷ்டத்திலேயே நடத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் அச்சிடுதற்காகிய காகிதங்களின் விலை பன்மடங்கு ஏறியமையும்; மலாய்நாட்டில் முன்னர் இப் பிரசுரங்களை அபிமானித்து ஆதரித்துவந்த நமது அபிமானிகள் இப்பொழுது அப்படி ஆதரித்தற்கு இயலாதிருத்தலுமேயாம். இங்ஙனமானலும் நமது முன்னேர் ஸ்தாபித்த இந்த தரும ஸ்தாபனங்களை இப்பொழுது தளர்ச்சியுற விடுதல் முறையாகாது. மேலே காட்டப்பட்ட காரணங்களால் இச்சபைக்கு இப்பொழுது நேர்ந்துள்ள கடனை ஒருவாறு தீர்த்து இன்னமும் இதனை நன்னிலையில் நடத்தவேண்டுமென்ற நோக்கங்கொண்டு இதற்காகிய யோசனைகளைச் செய்யும்படி திருவாளர்கள்: A. V. குலசிங்கம், C. அருளம்பலம், R. சிவகுருநாதர், T. முத்துச்சுவாமிப்பிள்ளை, C. சிவசிதம்பரம் (டக்ரர்) V. M. சரவணமுத்து, S. பொன்னுச்சாமி, V. கந்தையா, V. T. சம்பந்தன், A. அருளம்பலம், M. மயில்வாகனம் என்னுமிவர்களைக் கொண்ட ஓர் உபநிருவாகசபை நியமிக்கப்படலாயிற்று. குறித்த உபசபையார் சென்ற யூன்மீ 27ந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வரும் நிர்ணயங்களை நிறைவேற்றியுள்ளனர்,

1. இச்சபையில் அபிமானம் வைத்துள்ள ஒவ்வொருவரிடத்தும் தானமாகப் பணம் பெறுதல்.

2. சங்கீத கதம்பக் கச்சேரி வைத்து நடத்தி அதனல் வரும் ஊதியத்தைப் பெறுதலும், இங்கே படக்காட்சி வைத்து நடத்தும் அதிகாரிகளிடம் ஒருநாள் வருவாயையேனும் சபைக்கு உதவும்படி ஒழுங்கு செய்தலுமாம்.

இச்சபைக்கு நேர்ந்துள்ள கடனைத் தீர்த்து நிரந்தரமான நிதியைச் சேர்த்து வைத்தற்கு அபிமானிகள் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது. பொருளுதவ விரும்புவோர்,

இந்துசாதன மனேஜர், வண்ணர்பண்ணை, (யாழ்ப்பாணம்.) என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாகும்.

யாழ்ப்பாணம், ம. மயில்வாகனம்,
கௌரவகாரியதரிசி, சைவபரிபாலனசபை,

# ஜப்பானிய கடற்படைக்குப் பெருந் தோல்வி

## குலாகுடா கடற்போரைப் பற்றிய புதிய விவரங்கள்

லண்டன் யூலை 9—

மத்திய சாலமன்ஸ் தீவுகளுக்கருகில் குலா குடாவில் நடைபெற்ற கடல்போரில் ஜப்பானியர் படுதோல்வி யடைந்ததுபற்றிய புதிய விவரங்களை அறிவிக்கையில் லண்டன் டைம்ஸின் நியூயார்க் நிருபர் எழுதுவதாவது:—

நமது கப்பல்களின் பிரங்கிப்பிரயோகத்துக்கு ஆளான சத்துருக் கப்பல்கள் அனைத்தும் ஒன்று மூழ்கடிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டனவென்று நிச்சயமாகக் கூறலாம். சத்துருக் கப்பல்களில் அநேகமாக எல்லாம் மூழ்கடிக்கப்பட்டன. அமெரிக்கர் ஹெலேனு என்னும் சிறு குரூய்ஸரொன்றைத் தான் இழக்க நேரிட்டது. அக்கப்பலில் இருந்த சில கப்பலோட்டிகளும் மூழ்கினர். ஆனல் அக் கப்பலில இருந்த கப்பலோட்டிகளில் பெரும்பான்மையோர் பாதுகாக்கப்பட்டுவிட்டனர்.

குறைந்தது எட்டு ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டும் இரண்டு கப்பல்கள் சேதமடைந்தும் இருக்கவேண்டுமென்று அட்மிரல் ஹால்சேயின் தலைமைக்காரியாலயம் அறிவிக்கிறது. சேதமடைந்த சத்துருக் கப்பல்களில் ஒன்றிரண்டு தப்பியோடியிருக்கக்கூடும். சத்துருக் கப்பலகளில் அதிகமாக இருந்தது நாசகாரிகளாகும். மற்றவை சிறு குரூய்ஸர்களாகும்.

அட்மிரல் ஹால்சேயின் காரியாலயத்திலிருந்து வந்த செய்திகளைவிட நேசதேசத் தலைமைக்காரியாலயத்திலிருந்து வந்த செய்தி போரின் முடிவைப்பற்றி இன்னும் தீர்க்கமாக இருக்கிறது. சத்துருக்கப்பல்களில் குறைந்தது ஒன்பது யுத்தக் கப்பல்கள் ஆழ்த்தப்பட்டனவென்று சொல்லப்படுகிறது.

இக் கடற்போரில் மூழ்கிய அமெரிக்க குரூய்ஸர் 'ஹெலினு'விலிருந்து 600 பேர்களுக்குமேல் காப்பாற்றப்பட்டுவிட்டனரென்று அக் கப்பலில் இருந்த அமெரிக்க போட்டோகிராபர் மிஸ்டர். ஆலன்ஜாக்சன் கூறுகிருர். அவர் மேலும் கூறுவதாவது:- வடக்கிலிருந்து வந்த அமெரிக்க கப்பல்கள் குலாகுடாவில் நுழைந்தவுடன் ஐந்து நாசகாரிகள் நான்கு குரூய்ஸர்கள், இன்னும் பல 'சப்ளை'க் கப்பல்கள் கொண்ட சத்துருகப்பல்கள் கோஷ்டிகளைத் தாக்கின. இக்கப்பல்களில் சில விலாவில் துருப்புகளை இறக்குவதில் வெற்றி பெற்றிருக்கக்கூடுமென்று கருதப்படுகிறது.

### தென்மேற்குப் பசிபிக்கில் ஜப்பானிய விமான பலம்

தென்மேற்குப் பசிபிக்கில் ஜப்பானியரிடம் மிகவும் குறைவாகவே

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸு
ஆனிமீ உஅஉ திங்கட்கிழமை

## ஜர்மனிய-ருஷிய தனிச் சமாதானம் உண்டாகுமா?

சிலவாரங்களாக ருஷியர் ஜர்மனியருடன் தனியே, அதாவது பிருத்தானிய அமெரிக்கருடைய சம்மதத்தை எதிர்பார்த்தலின்றி, சமாதானஞ் செய்வரென ஒரு வதந்தி பிறந்தது; ஆயினும் அவ்வதந்தி ஆதாரமற்றதென விஷயமறிந்தவர்களால் நம்பப்படாதொழிந்தது. ஆனால், இப்பொழுது இரண்டு மூன்று தினங்களாகக் கிடைக்குந் தந்திச் சமாசாரங்களைப் பார்க்குமிடத்து, முந்திய வதந்தி முழுவதும் ஆதாரமற்றதெனவும் நினைத்தற்கு இடமில்லையெனலாம். ருஷியருடன் தனியே சமாதானஞ் செய்துகொள்ளும் நோக்கம் ஹிட்லரிடத்து உண்டென நாம் இப்பொழுது எண்ணத்தக்க ஏதுக்கள் சிலவுள. ஜர்மனியர் தாமாக இப்பொழுது ருஷியரைக் கடிது தாக்கத் தொடங்கியிருக்குங் காரணம் யுத்தத்திலே ருஷியரை நெருக்கி அடித்தால் அவர்கள் சமர் செய்யவாற்றாது சமாதானத்திற்கு உடம்படுவரென ஜர்மனியர் கூறுகின்றார்களென்றும், சீக்கிரத்திலே ருஷியருடன் சமாதானம் ஆக்கிக்கொள்ளாவிடில், ஜர்மனியர் தாங்கள் ஏனைய ஐக்கிய தத்துவ ராச்சியத்தினருடன் இப்பொழுது செய்துவரும் யுத்தத்திலே தோல்வியுற நேருமென ஜர்மனிய விவகாரங்களை நன்கறிந்த ஒருவர் தெரிவிக்கின்றாராம்.

ருஷியாவிலே கோரமான யுத்தம் நடக்கின்றதென்பது இப்பொழுது வரும் தந்திச் சமாசாரங்களை ஆதாரமாகக் கொண்டு அறியலாகும். ருஷிய சைநியத்தை ஜர்மனிய படையூடறுத்துச்சென்று விட்டதாகவும், இருபக்கத்திலும் பெருந்திரளான சைநியம் யுத்த உபகரணங்களுடன் வந்து சேர்ந்து யுத்தம் செய்கின்றனவெனவும், ஜர்மனியர் கூற்றால் அறியக்கிடக்கின்றன. ஆனாற் பகைவருக்குப் பெருஞ்சேதம் விளைத்துவிட்டதாகவும் தாம் பகைவரை முன்னேறவொட்டாது தடுத்து நிற்பதாகவும் ருஷியருங் கூறுகின்றனர். ருஷியாவிலே இப்பொழுது நிகழுங் கோடைக்காலம் முடிவதற்கிடையில் ருஷியரைத் தோலவியுறச் செய்து நாட்டையுங் கவர்ந்துவிட வேண்டுமென்று நினைக்கிறார் ஹிட்லர்; இந்தக் கோடைக்காலத்திற் கிடையே ஜர்மனியரைத் தோலவியுறச் செய்து புறங்கண்டு தாம் இழந்த நாடுகளையும் மீளப் பிடித்துவிடல்வேண்டுமென்று தீர்க்கமாக நிற்கிறார் மிஸ்ரர் ஸ்ராலின். இவற்றுள் யாருடைய நோக்கம் அநுகூலமாகும் எவருடைய நோக்கம் பிரதிகூலமாகுமென்பதை இப்பொழுதே சொல்லிவிட எவராலும் முடியாது.

ஆனல், ருஷிய தலைவராகிய மிஸ்ரர் ஸ்ராலின் தாம் ஒரு கருமத்தைப் புதிதாகச் செய்வதற்குமுன், மூன்றுதரம் நினைப்பது புத்தியின்பாற்படும். ஹிட்லருடன் ஸ்ராலின், ஐக்கிய தத்துவராச்சியத்தினரைப் புறக்கணித்துத் தனியே சமாதானம் பேசிப் புகுவரேல் அது ஸ்ராலினுக்கு இலாபந்தரக்கூடிய செயலாகாது. ஸ்ராலின் ஹிட்லரோடு முதற் சேர்ந்து பின் பிரிந்து இனிமேலும் பழையபடி சேர்வாரேயானல் அவ்விருவருடைய நட்பும் திண்மையுறா. என்? "நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும், நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்" எனப் பெரியோர் கூறியுள்ளாராதலின் ஹிட்லர் தம்மைப்பலமுறை நையப்புடைக்கவும் பிருத்தானிய அமெரிக்கர் தமக்குப் போதிய 'படைத்துணை பொருட்டுணை செய்திலரென்பது மிஸ்ரர். ஸ்ராலினுடைய எண்ணம். அவர்கொண்டுள்ள அந்த எண்ணம் சரியோ பிழையோ என்பதை ஆராய்ந்தறியுங் கடமை உலகோரைப் பொறுத்ததாகும். ஆனல் இவ்வளவுகாலமும் பொறுத்திருந்த மிஸ்ரர் ஸ்ராலின் இப்பொழுது பிருத்தானிய அமெரிக்கர் இரண்டாம் யுத்தமுனையெனச் சிசிலியை இத்தலியருக்குமாறாகத் தாக்கத் தொடங்கியதைக் கண்டும், அவசரப்படக்கூடாது. ஆக்கப்பொறுத்த ஸ்ராலின் ஆறப்பொறுக்கவொண்ணாதா? இந்த இரண்டாம்யுத்தமுனைப் போரின் முடிவைக் கண்டல்லவா மிஸ்ரர்.ஸராலின் தாம் நினைத்தபடி செய்தல் புத்தியாகும்?

---

### 'மலேயா மக்கள் துரோகிகளல்ல'

ஆசிய மக்களுக்குக் குடியேற்றநாட்டு மந்திரியின் புகழ்மாலை

லண்டன் ஜூலை 7—

மலேயாவிலிருக்கும் ஆசியா மக்கள் பிருத்தானியருக்குக் கீழ்ப்படிவுள்ள பிரஜைகளாகவே இருந்தார்களென்று மலாயா யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் கூறுவதாக குடியேற்றநாட்டு மந்திரி கர்னல் ஆலிவர் ஸ்டான்லி இன்று காமன்ஸ் சபையில் தெரிவித்தார்.

சொற்ப ஆயுதந்தரித்திருந்த ஜப்பானிய வீரரையும் மலாயாவிலிருந்த ஆசியா வாசிகளையும் பிரித்தறிவதில் கஷ்டமேற்பட்டதனை காரணமாகவே மலாயா மக்கள்மீது ஆரம்பத்தில் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கலாமென்றும் அவர் கூறினர்.

ஜப்பானியர் மலாயாவை ஆக்கிரமித்தபோது அங்கிருந்த மலாயா இந்திய சீனப் பிரஜைகள் எவ்வாறு நடந்துகொண்டன ரென்பதைப் பற்றி ஒரு அறிக்கை [illegible] முடியுமா என்று [illegible] யிடம் கேட்கப்பட்டது.

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

பூமேவு சதுர்முகனுந் திருமாலும்
போற்றிசெயத்
தேமேவு குழலுமையாள்செழுங்குவளை
விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப
மணிமன்றந்
தாமேவி நடம்புரியுந் தனிப்பொருளை
வணங்குவாம்.

சிவ விரதங்களுட் பிரதோஷ விரதஞ் சிறந்ததாகும். இது சுக்கில பக்ஷங் கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டுபக்ஷத்தும் வருகின்ற திரயோதசி திதியிலே, சூரியாஸ்தமயனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும் பின் மூன்றே முக்கால நாழிகையுமாய் உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே, சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இவ்விரதம் ஐப்பசி கார்த்திகை சித்திரை வைகாசி என்னும் நான்குமாசங்களுள் ஒன்றிலே, சனிப்பிரதோஷ முதலாகத் தொடங்கி, அநுட்டித்தல் வேண்டும். பகலிலே போசனஞ் செய்யாது, சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை உண்டு என்னும் அளவிலே ஸ்நானஞ் செய்து, சிவ பூசை பண்ணித், திருக்கோயிலிற் சென்று சிவதரிசனஞ் செய்து கொண்டு, பிரதோஷகாலங் கழிந்த பின் சிவனடியாரோடு போசனம் பண்ணல் வேண்டும். பிரதோஷ காலத்திலே,பகற்போசனம்சயனம் ஸ்நாநம், விஷ்ணுதரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திரசெபம், நூல்படித்தல் என்னும் இவ்வெட்டுஞ் செய்யலாகாது, பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்துகொண்டுவரின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரண வேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். அஸ்தமயனத்துக்கு மூன் மூன்றே முக்கால் நாழிகையே சிவ தரிசனத்துக்கு உத்தம காலம்.

பிரதோஷ காலத்திலே சிவலிங்க தரிசனஞ் செய்வோர் பின்வருமாறு செய்தல் வேண்டும்:-இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச்சென்று சண்டேசுரரைத் தரிசித்து, சென்றவழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச்சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன்சென்றவழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்றுந் திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றுந் திரும்பி வந்து, இடப தேவரைத் தரிசியாது இடமாகச்சென்று சண்டேசுரரைத் தரிசித்துத், திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடுகூட ஹர ஹர என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும்.

### விரதமநுட்டித்துப் பேறு பெற்றோர்

பூர்வத்தில் விதர்ப்பநாட்டையாண்ட சத்தியாதனன் என்னும் நாமத்தைப் பூண்ட அரசனொருவன் இருந்தான. அவன் அறிவில் நீதியில் வாய்மையில் கட்டழகில் செல்வப்பெருக்கிற் சிறந்தவன். அவனுடைய மந்திரிமாரும் ஆலம் வீழ்தன்ன அமைச்சராயிருந்தனர்; [illegible]காணும் சதுரங்க [illegible]அரண்களும் அவ்வரசனுடைய நாட்டிலுள்ளன.

சத்தியாதனன் என்னும் அவ்வரசன் சகல சீர்சிறப்புக்களுடனும் நீதியோடும் அரசாண்டுவரும் நாளில், சாலுவதேயத்து அரசனுகிய துன்மருஷணனும் சில சிற்றரசர்களும் சேர்ந்து இச்சத்தியாதனனுக்கு மாருகப் படையெடுத்துச் சென்று விதர்ப்பநாட்டைச் சூழ்ந்தாராய் அவனுடன் போர்செய்ய முற்பட்டனர். பகையரசர் தன்னுடன் யுத்தஞ்செய்யும்படி வந்து நாட்டைச் சூழ்ந்து நிற்கின்றனரென்பதை ஒற்றர் மூலமாக அறிந்த சத்தியாதனன் தனது மந்திரிமார் சேனைத்தலைவர் தன்னைச் சூழ்ந்துவர, யானை தேர் குதிரை காலாள் எனப்படும் நால்வகைச் சேனைகளோடும் புறப்பட்டுச் சென்று பகைவரைத் தாக்கினன்; பெருஞ் சமர் மூண்டது. ஒரு பகலில் நடந்ததாகிய அந்த யுத்தத்திலே பொழுதுபடுஞ் சமயத்திற் சத்தியாதனனுடைய சேனைகள்பல உயிர் சிதைந்தும் சில போர்க்குடைந்தும் அழிந்துபோக, அவனுடைய சேனைத்தலைவரும் மந்திரிமாரும் மாண்டொழிய, ஈற்றிற் சத்தியாதனன் துன்மருடணனுடன் நேரே எதிர்த்துப் பொருது வீரசொர்க்கம் புகுந்தான்.

அரசன் மாண்டதையும் பகையரசனுகிய துன்மருடணன் பட்டினத்துட் பிரவேசிக்க நோக்கங்கொண்டு வருவதையும், ஒற்றர் ஓடிச்சென்று, அக்காலத்திற் கருப்பவதியாயிருந்த கற்பிற் சிறந்த சதியென்னும் பெயருடைய அரசன் தேவிக்குத் தெரிவித்தனர்; கேட்டமாத்திரத்தே அவள் இடியேறுண்ட சர்ப்பம்போல் ஏங்கித் துடிதுடித்து அறிவு சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தாள். பின்னர் ஒருவாறு மயக்கம் நீங்கியவளாய் எழுந்திருந்து தனது சிரத்திற் கைகளால் மோதி அரற்றினள்; இன்னுஞ் சிறிது நேரம் அங்கே தான் இருந்தாற் பகையரசனுடைய கையில் அகப்படவேண்டி நேரும் என்ற அச்சத்தினல் அந்த இரவிலே அந்தப்புரத்தை விட்டகன்று தன்னந்தனியே போய் நாட்டின் புறத்தேயுள்ளதாகிய காட்டினுட் புகுந்தாள். வனத்துட் புகுந்து சிறிது தூரஞ் செல்லுதலும் அங்கே ஒரு தடாகம் புலப்பட, அரசனுடைய தேவியாகிய சதியென்பாள் தன்னுயகன் பிரிவாற்றுது தலையில் மோதிய வருத்தத்தினுலும், வழிநடந்த சிரமத்தினுலும், கருப்பம் முதிர்ந்தமையினுலும், பசி தாகம் முதலியவற்றுலும் அதிக ஆயாசமடைந்தாளாய் அத்தடாகத்தின் கரையில் நின்ற ஒரு மரநீழலில் மெல்ல இருந்தாள். அந்த விருளிற் சதியென்பாள் அங்ஙனமிருந்தபோது நோக்காடுண்டாகி ஒரு ஆண்குழந்தையைப் பெற்ருள். பெற்றவள் துயர மேலீட்டினுலும் வழிநடந்த இளைப்பாலும் மகவுயிர்த்த சிரமத்தாலும் நீர் வேட்கையுண்டாக, மெல்ல எழுந்து அத்தடாகத்தின் கரையை அடைந்து தன் இருகரங்களையும் கோலித் தண்ணீரள்ளிக் குடிக்கும்போது, ஐயோ! பாவம்! ஒருமுதலை அவளைப்பற்றி இழுத்துக் குளத்துள் அமுக்கிக்கொண்டு போயது. பெற்றவுடனே தன் மாதாவை இழந்த குழந்தை பசும்புன்னிலத்திலே பாயலின்றிக் கிடந்து அரற்றியது.

இங்ஙனமாக பெண்களுக்குரிய குணங்கள் ஒழுக்கங்களெலலாம்

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாணாழ்வார்

(திரு. அருள் தியாகராஜா அவர்கள், கொழும்பு வானொலியில் 20-6-43ல் பேசியது)

ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் வைஷ்ணவம். இச்சமயமானது தென்றமிழ் நாட்டிற் பரவுவதற்குக் காரணரா யிருந்தவர்கள் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலிய பன்னிரு ஆழ்வார்களாவர். ஸ்ரீலக்ஷ்மீ காந்தனை நெஞ்சமுருகிப் பக்திப் பரவசத்துடன் பாடுவதில் இவர்கள் தன்னொப் பாரில்லாதவர்கள். இந்த ஆழ்வார்கள், ஸ்ரீதேவி, பூதேவி, பஞ்சாயுதங்கள் முதலிய நித்திய சூரிகளின் அவதாரம் என்பது கொள்கை. ஈசுவரனுடைய ஆணைப்படி ஜனங்களுக்கு நேரும், ஜனனமரண துக்கங்களை ழொழித்து, அவர்களை முத்தியடையச் செய்யும் வழியைக் காட்டுவதற்காகப் பலவிடங்களில், பல காலங்களில் பல சாதிகளி லவதரிப்பவர்கள். புருஷோத்தமனுகிய ஸ்ரீமந் நாராயணனின், திவ்விய மங்கள விக்கிரகத்திலும், அனந்த கல்யாண குணங்களிலும் ஈடுபட்டுக "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலுமே" என்றபடி ஆனந்தானுபவ வெள்ளப் பெருக்கில் ஆழ்ந்து பரவசப்பட்டவ ராதலால், இவருக்கு ஆழ்வா ரெனத் திருநாமஞ் சாற்றப்பட்டது.

இவர்களால் இயற்றப்பட்ட திருப்பாடல்களுக்கு நாலாயிர திவ்யப் பிரபந்த மென்றும், திராவிட வேத மென்றும்பெயர். இவ்வாழ்வார்களில ஆண்டாளும் திருப்பாணாழ்வாரும் ஸ்ரீரங்க நாதனிடத்தில் ஈடுபட்டவர்கள திருப்பாணாழ்வார் "தண்ணுமுங் காவிரித தாதுமலி பெருந் துறைப்புணணிய நன்னீர் பாயப் பெற்ற, புண்ணிய பூமியாகிய சோழநாட்டின் ராஜதானிகளிலொன்றாய் விளங்கின உறையூரில் ஏறக்குறைய ஆயிர வருடங்களுக்கு முன்பு கிருஷ்ண பரமாத்மாவின் அருளால் கார்த்திகைத திங்களின் உரோகிணி நாளில் புதவாரத்தில் திருமாலின் திருமறுவின அம்சமாய், ஓர் செந்நெல வயலில அவதரித்தார். அப்பொழுது, அவ்வழியே தன மனைவியுடன போநத பாணர் குலத்தா னொருவன், தான் பூர்வ ஜனமத்தில் ஈட்டிய புண்ணிய விசேடத்தால் இக் குழந்தையைக் கண்டு மிகக ஆர்வத்துடனும் பெருமகிழ்ச்சியுடனும் எடுததுத் தன் மனைவி கையிற் கொடுத்தான. அவள், வறியவர் பெருநிதி பெற்றாற போல மகிழ்ச்சி கூர்ந்து, அபபிள்ளையைப் பேரனபுடன் வாங்கி முகத்திலணைத்துச்சிமோந்து, அதற்கு ஆவினபாலை ஊட்டிக் தன கண்மணியைப் போல வளர்த்து வந்தாள.

செங்கண்மாலின் திருவருளால் உதித்தவராதலால் பிறந்தது முதல் உலக வாழ்க்கையைத் துறந்து, தனது மனத்தின் செய்கைகளை அச்சுதனடிப் போதுக்காக்கினார். இவர் இளமையிலேயே தாம் புகுந்த குலத்திற் கேற்ப யாழ்வாசிப்பதிலும், பாடுவதிலும், அபூர்வமான தேர்ச்சி பெற்று, நாரத முனிவரைப் போலப் பகவானுடைய கல்யாண குணங்களை ஞானவைராக்கிய பத்தியைப் புகட்டும் இனிய சொற்களால் மதுரமான கானத்துடன் அப்பெருமானை அர்ச்சனை செய்து வந்தார். அந்தக் காரணத்தினல் இவருக்குத் திருப்பாணாழ்வாரென்ற பெயர் வந்தது. இவருக்குத் திருவரங்க நாதன் மறைவில் எழுந்தருளித் திருவிலச்சனை யிட்டு மறைந்தருளினர். அதனல் இவர் கண்ணகன ஞாலமளந்த பெருமானின் திருவடித் தொண்டிற் குரியவராகி, ஸ்ரீரங்கத்தில பாமபணையில் துயில் கொள்ளும் பரமனுக்குகந்த பாடற் றெண்டு புரிய வெண்ணினர். இவ்வின்னிசைவாணர் பாணர் குலத்தில் வளர்ந்தவராகையால், அந்தப் புண்ணிய ஸ்தலத்தை மிதிக்கப் பயந்து, தென்பாலுள்ள திருக்காவிரியின் தென்கரையில் திருமுகத் துறைக்கு எதிராக நின்று, காவிரி யென்னும் நதியானவள் திரைக் கையால் தன்னுல களந்த திருவடிகளை வருடப் பள்ளி கொள்ளும் மணிவண்ணனைத் திசை நோக்கித் தொழுது, யாழினை மார்பிற்றாங்கி, நரம்பினைவருடி இசையை யெழுப்பி, மிடற்றொலியும் யாழிசையும் ஒரு தன்மையவாய் வேறுபடாது தோன்ற, கேட்பவர் பரவசம் அடைய, கந்தருவர், வித்தியாதரர் முதலியோர் வியப் பெய்த, திருமால் திருவுளம் மகிழ ஒரே மனத்தராய்ப் பாடிப்பரவுவாராயினர்.

இவ்வணம் பாணர் இன்னிசையாற் பணிசெய்து வருங் காலதது, ஒருநாள் ரங்கநாதனுக்குப் பிரதிதினமும் திருமஞ்சனக் கைங்கரியம் செய்யும் லோகசாரங்க ரென்ற முனிவர், வழக்கப்படி பொற்குடததை எடுத்துககொண்டு பொன்னித்துறைக்குப் போன போது, சமீபத்தில் நின்று துதி பாடும் ஆழ்வாரைப்பார்த்து, அவருடைய அகநிலையைச் சற்றேனும் உணராது, வெளிப்படையான வேஷத்தை மாத்திரம நோக்கி 'எட்டிப்போகச் செல்' என்று பலமுறை சொன்னர். அப்பொழுதும் தன்னையும் இவ்வுலகத்தையும் மறந்து யாழ் வாசித்த ஆழ்வாருடைய செவிகளில அச்சொற்கள் விழவில்லை. அப்பொழுது அங்கிருந்த சிலபார்ப்பனா ஓடி வந்து மேல்குலத்தாரென்ற இறுமாப்பால் அவரைக் கல்லால் அடித்தார்கள். அதனுல் அவர் நெற்றி காயப்பட்டு ரததம் பெருகிறறு. தியானசமாதி திடீரென்று கலைந்து ஆழ்வார் விழித்துக்கொண்டு 'ஐயோ என்ன அபசாரஞ் செய்தேன்! பரமபாகவதர்கள் நடமாடும் இவ்விடத்தில அடிவைக்கத் துணிந்தேனே' யென்று அந்தணர்களை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தூரவிலகினர். அப்பொழுது அவருக்கு உடலிலாவது உள்ளத்திலாவது கொஞ்சமேனும் வருத்தங் காணப்படவில்லை. ஆனால பக்தர்களை தனக்கு ஆத்மாவாய்க்கொண்ட திருவரங்கச் செல்வன் திருவுளங் கலங்க, அப்பெருமான் திருநெற்றியிலிருந்து இரததம் பெருகிற்று. இதனைக்கண்ணுற்ற கோயில அர்ச்சகர்களும் அதிகாரிகளும், அரசனும் செய்வதென்னென்றறியாது நடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

அன்றிரவில் ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமான் லோகசாரங்க முனிவர் என்னும் ஜீயரது கனவில் தோன்றி 'நீர் பிராமணனென்ற கர்வத்தால் ஞானக்கணணை இழந்து நமது நண்பனான பாணப்பெருமானை அடித்துத் துரத்தினது தகுதியா? அதனாலல்லவா எனது நெற்றியில் ரததம் பெருகிறறு. அதற்குப் பிராயச்சித்தமாக நீர் நாளைக்காலையில் அவரை நும்தோளிலேற்றி எம் பக்கலில் கொண்டுவருக' என்று பணித்தார்.

முனிவர் விழித்தெழுந்து ஆச்சரியமடைந்து, தான கண்டகனவை யாவருக்கும் தெரிவித்து அவர்களும் பின்தொடரத் திருக்காவிரியை யடைந்து அங்கு திருமுகத் துறையில் தீர்த்தமாடி, திருவரங்கத்தை நோக்கிச் சேவித்துத், தலைகானஞ்செய்துகொண்டு இருக்கும் ஆழ்வாருடைய திருவடிகளில் ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு 'அடியேன் அறியாமையால் செய்தவற்றைப் பொறுத்தருளல் வேண்டும். மற்றும் தேவரீர் திருவரங்கத்திற்கு எழுந்தருளல்வேண்டும் என்று பிரார்த்தித்தார், இது எம்பெருமானின் கட்டளையாகும் என்று விண்ணப்பம் செய்தார். அதற்கு ஆழ்வார் 'அந்தோ,' பரமசண்டாளனாகிய அடியேன் உபய காவிரியை மாலையாகப்பெற்ற திருவரங்கத் திருப்பதியை மிதிக்கத் துணிவேனே! வென்று அங்கிருந்து எட்டிச் சென்றார். அதைக்கண்டு அவ்வந்தணர் மீண்டும் 'சுவாமீ அப்படித் திருவுள்ள மிருந்தால், பெரியபெருமாள் திருவடியின் திருத்தோளில எழுந்தருளுவதுபோல், தேவரீர் அடியேனுடைய தோளில் ஏறியருளவேண்டும்' இது ரங்கநாதனின் நியமனம் என்று வேண்டினார். எம்பெருமானின் கட்டளையென்று கேட்டவுடன் பாணர் அதனை மறுத்தற்கஞ்சி, அப்பெருமானை காதலுடன் நினைந்து 'உன திருவுள்ளம் நடக்கட்டு' என்று செயலற்று நின்றார். பின்பு லோகசாரங்கமகாமுனிவர் பாணப்பெருமானைத் தன் தோளிலேற்றிக் கொண்டு, பிறவிப் பெருங்கடலைத் தாண்டிப், பரமபதத்திற்குப் போகிறவனை, ஆதிவாஹிகர்கள் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போவது போல், அழகிய மணவாளப்பெருமானின்சந்நிதியில் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

பிறந்தது முதல் எம்பெருமானுடைய திவ்ய மங்கள சொருபத்தைக் கண்ணாரக்கண்டு களிக்க வேண்டுமென்று, அல்லும் பகலும் அவாதமும் அவாக்கொண்ட பாணப்பெருமாளுக்கு ரங்கநாதன் தன் பூர்ண சொருபத்தைக் காட்டினார். பாணப்பெருமான் திருவரங்கத் தின்னமுதின் எழில் மிகுத்த திருப்பெருவடிவத்தை அடியிருந்து முடிகாறும ஆராத காதலுடன நோக்கி வணங்கி, அனுபவித்து; ஆனந்த வெள்ளததில் திளைத்தார். அங்ஙனம் தாம்பெற்ற இன்பானுபவத்தை இவ்வுலகின்கணுள்ள ஏனையோரும் உணர்ந்து உய்யும்பொருட்டு "அமலனாதிபிரான்" என்னும் பத்துப் பாட்டுடைய பிரபந்தத்தை முதலிலிருந்து அருளிச் செய்தார். அப்பாசுரங்களை அவர் அருளிச் செய்துகொண்டே வரும்பொழுது

"கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்னுள்ளங்
கவர்ந்தானை
அண்டர் கோனணி யரங்கன்
என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக்
காணாவே"

என்ற பாசுரத்தைப்பாடி, ஆனந்தபரவசராய் மெய்ம்மறந்து நிற்கையில், எம்பெருமான் அதைக் கேட்டு, ஆழ்வாரை விட்டு அதுவரையில் பிரிந்த துயரம் தாங்காமல் அவரை அந்தத் திருமேனியோடே, தன்திருவடிகளில் யாவரும் காணும்படி சேர்த்துக்கொண்டார். லோக சாரங்கர் போன்ற அருந்தவர்கள் பலர், இப்பாணர் பெருமானை வழிபட்டு நற்கதி பெற்றனர் என்ப.

இனி இவ்வாழ்வார் பிறந்த பாணர் குலத்தைப்பற்றியும் பாடிய இன்னிசையைப்பற்றியும் ஓர் சிறிது கூறுவாம். பாணர் என்பார் தமிழ் நாட்டின் துடியன், பாணன், பறையன் கடம்பன் என்ற தொல்குடிகளுள் ஓர் குடியினராவர். பண் பாடுதலின் இவர்கள் பாணர் எனப்படுவர், பாண் குடியினர் மிகத் தொன்மை வாய்ந்தவரென்று தொல்காப்பியம் என்னும் மிகக பழமை வாய்ந்த செந்தமிழ் நூலினிருந்து எமக்கு அறியக்கிடக்கின்றது. பாணர், யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் எனப் பலதிறப்படுவர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, சிலப்பதிகாரம், கலித்தொகை, ஐங்குறுநூறு முதலிய இலக்கிய நூல்களிலும், பிங்கலந்தை திவாகரம முதலிய நிகண்டு நூல்க

தொடர்ச்சி 5 ம் பக்கம்

## சிறுப்பிட்டி அரசினர் பாடசாலைப் பரிசளிப்பு

சென்ற ஆனிமாதம் 30 ந் தேதி புதன்கிழமை, சிறுப்பிட்டி அரசினர் பாடசாலைப் பரிசளிப்புவிழாவில் வடமாகாண அதிபர் திரு. M. பிரசாத் அவர்கள் பின்வரும் வியப்புரைகளைக் கூறினர். "சென்ற 2½ வருஷங்களுக்கு முன் யான் இப்பாடசாலையின் திறப்புவிழாவிற் சமுகமாயிருந்தேன். இன்றைய காட்சி எனக்கு மிக மிக அதிசயமாயிருக்கின்றது. காட்டாந்தரையாயிருந்த இவ்விடத்தில் ஒரு அழகான தோட்டம் குதித்திருப்பதைக் காண்கிறேன். இப்பாடசாலைத் தலைமையாசிரியர், இப்பாடசாலையின் மேனேக்கத்தில் மாத்திரம் கண்ணுங் கருத்துமா யிருப்பதோடமையாது கிராமத் தோட்டங்களையும, அயலிலுள்ள காட்டாந்தரைகளையும் மிக நன்னிலைக்குக் கொண்டுவா ஊக்க மெடுக்கிறார். இக்குள்ள வளர்ந்தோர் வகுப்பு மிகமெச்சத் தக்கதாகக் கிராமப் புநருத்தாரண உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்டு வருகின்றது."

அன்று பி. ப. 1 மணி வரையில் விளையாட்டுக்கள் ஆரம்பமாகி, 5 மணியளவில் பரிசளிப்புக் கூட்டம் தேவாரத்துடன் திரு. M. பிரசாத் அவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பமாயது. பாடசாலை மாணவராலும், இராப்பாடசாலை மாணவராலும் சபையோர் களிக்குமாறு ஆடல் பாடல்கள நிறைவேற்றப்பட்டன. பாடசாலைப் பிள்ளைகட்கும், இராப்பாடசாலை மாணவர்க்கும் பழமரங்கள் போன்ற உபயோகமான பரிசில்கள் வழங்கப்பட்டன.

சென்ற 2½ வருடகால வேலையைப் பற்றிய அறிக்கைகளைக் கொண்டு தலைமையாசிரியர் திரு. ச. கந்தப்பு அவர்களினதும் கிராமப் புநருத்தாரண உத்தியோகஸ்தர்களினதும் திகைமைகளை அறிந்துகொள்ளலாம்.

கிராமப் புநருத்தாரணஉத்தியோகஸ்தர் திரு. முத்துவேலு அவர்கள், இராவகுப்புச் சொற்ப காலத்துள் நலமாய் வந்ததை யிட்டும், கைத்தொழில் விருத்தி பண்ணுவதற்கு ஒருநிதி திரட்டுவதை யிட்டும் பேசினர். கிராமச் சங்க உபதலைவர் திரு. செல்வராசா அவர்களும், கிராம விதானை திரு. K வேலாயுதர் அவர்களும், உத்தம சிவிய விருத்திச் சங்கத்தலைவர் திரு. K. சிவகுரு அவர்களும், நாடகாசிரியர் திரு. செல்லத்துரை அவர்களும் குறிப்புரைகள் கூறினர்.

ஈற்றில் தலைமையாசிரியர் திரு. கந்தப்பு அவர்கள் பாடசாலை வளர்ச்சியிலும், இராவகுப்பு வளர்ச்சியிலும் கூடிய ஆர்வம் காண்பித்ததற்காகத் திரு. M. பிரசாத் அவர்களுக்கும் ஏனையோர்க்கும் நன்றி கூறினர்.

இடைவேளையின் பின் பாடசாலை ஆசிரியர்களும், ஊரவர்களும் சேர்ந்து சுபத்திராபரிணயம் அரிச்சந்திரா என்பவற்றில சில பகுதிகளை நடித்துக் காட்டினர்.

—கடித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்ததர்மம்

(ராவ்சாஹிப் மு. ராகவையங்கார்)

நாம் இப்போது வாழ்ந்து வருவது உலகப் பெரும் போராட்டத்தின் இடைக்காலமாகும். தன்னலமும் அதிகார இச்சையும் காரணமாக யந்திர தந்திரங்களாலும் இவிரக்கமற்ற செயல்களாலும் கொடுமை மிகுந்துள்ளது இப்பெரும் போர்.

ஆசைக்கோர் அளவில்லை யகில
மெல்லாங் கட்டி
ஆளினுங் கடல் மீதிலே ஆணை
செலவே நினைவர்'

என்ற ஆன்றோர் வாக்கிற்கு இந்த யுத்தம் ஒரு சிறந்த சான்றாகும். இதனைக் 'கலியுக மகாயுத்தம்' என்றே சொல்லவேண்டும். இது போல முன் யுகங்களில நடந்த மகா யுத்தங்களைப் புராண இதிகாசங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம். அவை, கிருத யுகத்துத் தேவாசுர யுத்தமும் திரேதாயுகத்து ராமராவண யுத்தமும் துவாபர யுகத்து மகாபாரதயுத்தமும் ஆகும்.

'தேவாசுர ராமாயண மாபாரத
முளவென்று
ஓவாவுரை ஓயும்படி உளதப்பொரு
களமே'

என்ற இக்கருத்துடன் கலிங்கப் போரைச் சிறப்பித்தார் செயங்கொண்டார்.

மேற்கூறிய ராமாயண மாபாரதங்கள் முறையே வால்மீகி வியாச முனிவர்களால் இதிகாசங்களாகப் பாடப்பட்ட பெருமை பெற்றன. இவற்றுள் பாரதமானது தாயாதிப் பகையால் விளைந்த போராட்டமாயினும், அறம் பொருளின்பம் விடு என்ற நால்வகை உறுதிப்பொருள்களையும் உயர்ந்த முறையில் விளக்குவதாகும்.

இந்த இதிகாசம் சங்க நாளிலும் பிற்காலங்களிலும் தமிழ்மொழியிலும் பாடப்பட்டிருந்தன. இராமாயணமும் அவ்வாறு தமிழுருவம் பெற்றிருந்ததே ஆனால் கம்பராமாயணமும் வில்லிபாரதமும் அவதரித்த பின்பு, அவை தம் பொலிவிழந்துபோயின. உத்தம இதிகாசங்களை உலகம் புகழப்பாடிய சிறப்பால், கம்பரும் வில்லிபுத்தூராரும் புலமையில் பெரும் மதிப்புப்பெற்றனர். தமிழில் கவி என்று நாம் இவர்களையே சொல்லத்தகும். இவர்களுள் நூற்றிருபத்தையாயிரம் கிரந்தமுள்ள பெருநூலை அற்புதமாக நாலாயிரப் பிரபந்தமாக்கி அளித்தவர் வில்லிபுத்தூர் ஆழ்வார்.

இவரது பாரதத்தால் நாம் அறியக்கிடக்கும் அறநெறிகளும் தத்துவங்களும் அளவற்றன. அறம் பொருளின்பமென்ற முப்பாலையும் அறநிலை மறநிலை என்று இரு வகையாலும விளக்குவது இவரது இதிகாசம். அறநிலையாவது சாந்தமான முறை. மறநிலையாவது வீரமடியாக நிகழும்முறை. இவைகளில அறநிலை முப்பால் என்பவை, அறநிலையறம் அறநிலைப்பொருள், அறநிலையின்பம் எனபன இவற்றின் இலக்கணத்தை:—

ஈதலறம் தீவினைவிட்டீட்டல்
பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்
தாதரவு பட்டதே யின்பம்

என்று சுருக்கிப் பாடினர் ஔவையார். இனி, மறநிலை முப்பால் ஆவன:—

மறநிலையறம், மறநிலைப்பொருள், மறநிலையின்பம் என்பன. இவற்றுள் அறநிலைகள் நாடு பகையின்றி அமைதி பெற்றுள்ள காலத்திலும் மறநிலைகள் அவை குழம்பிக்கிடக்கும் காலத்திலும் பெரும்பாலும் அமைவன. ஆனால் மகாபாரதமானது ஞாதிகளின் வஞ்சனை பொறாமை லோபங்களால் நிகழ்ந்த வரலாறுகளைக் கூறுவதாதலால் அறநிலைகள் மட்டுமன்றி, மறநிலை அல்லது வீரமுறையான முப்பால்களையும் சிறப்பாக விளக்குவதாயிற்று. இவ்வகையில் மறநிலைப்பறமாவது:—

ஆனிரை மீட்டல் அரும்பகை
தெறுதல் ஊனமில் செஞ்சோறு
உதவியோர் பகை ஈனம்செய்தல்....

என்பர் திவாகரர். இம்மூன்று செயல்களையும் வில்லிபாரதம் விளக்குவதாம். கௌரவ பாண்டவ யுத்தமானது, ஆனிரை கவர்தல் அது மீட்டல் என்ற செயல்களிலிருந்தே தொடங்கிய தென்பது அறியத்தகும். இதனை, நிரைமீட்சிச் சருக்கத்தில் வில்லிபுத்தூரரது அழகிய வாக்கால் பலரும் அறிவர். சூதுபோரில் அரசுரிமை யாவும் இழந்த பாண்டவர்கள் துரியோதனன் நியமித்தபடியே 12 ஆண்டும் காடு வாழ்ந்து 13ம் ஆண்டு கரந்துறைபவரானார்கள். கரந்துறைபவேண்டிகால விறுதியில் விராட நகரிலே அவரிருப்பை அறியவேண்டி, அந்நகர்ப்புறத்து மேய்ந்த அரசனது ஆனிரைகளைக் கௌரவ சேனைகள் கவர்ந்து சென்றன. அது அறிந்த விராடவேந்தன் பெரும் படையுடன் சென்று வீமனுதவியால் அவற்றை மீட்டனன். பின் துரியோதனனே பெருஞ் சேனையுடன் அந்நகரின் வடக்கு வாயிலை முற்றுகையிட்டான். அஃதறிந்து அங்கே பேடியுருக்கொண்டிருந்த அருச்சுனன் விராட புத்திரனைத் தலைவனாகக்கொண்டு தேரைச் செலுத்திச் சென்று அக்குருகுலவேந்தனை அவன் படையோடு முறியடித்தனன். கரந்துறைய வேண்டியகாலம் முடிந்ததும் தம் பழைய உருக்கொண்டு ஐவரும் வெளிப்பட்டார்கள் எனபது சரிதம்.

தமிழ்நாட்டாரின் புறத்துறையான பழைய போர் முறைகளிலே வெட்சி என்ற நிரைகவர்தலும் கரந்தை என்ற நிரைமீட்டலும, அரசர்க்குள் நடந்துவந்தபோரின் தொடக்கமாக முன்னூல்கள் கூறுவது, மேற்குறித்த வரலாற்றுடன் ஒப்பிடத்தக்கது. நிரைகவர்வோர் வெட்சிப்பூவையும் நிரைமீட்போர் கரந்தைப்பூவையும் அடையாளங்களாக அணிந்து செலவதுபற்றி வெட்சிகரந்தை என்ற அப்புறத்துறைகள் பெயர் பெற்றன. விராடனது நிரைகளைக் கவர்ந்த திரிகர்த்த வேந்தனை, விறல்வெட்சி மிலைதோளினன் என்றும் அந்நிரைகளை மீட்ட விராட வேந்தனைக் கரந்தைத் திருத்தாமன என்றும் வில்லிபுத்தூரார் கூறுவதும் காணலாம். 'சண்டைக்கு எடுபிடி மாடுபிடி' என்ற உலக வழக்கும் இதனுறைபற்றியதே.

இந்நிரைமீட்சிச் சருக்கத்தால் பாண்டவரின் சத்தியநெறியும் பொறுமையும் ஒற்றுமையும் கடமை செய்தலும் போன்ற உத்தம குணங்கள் பலவும் வெளியாகின்றன. இவர்கள் வெளிப்பட்ட பின் அறநிலை மறத்தின்முறையில் அரும்பகை தெறுதல் என்ற துறையிலே அவர்கள் இழியலானார்கள். இப்பகை வெல்லுங் காரியத்தை ஆதுரப்பட்டு இவர்கள் தொடங்கவில்லை. உலூகமுனிவரையும் கண்ணபிரானையுமே ஒருமுறைக் கிருமுறையாகத் தூதனுப்பி

ஆண்டு மன்னர் முன் சூதுபோர்
பொருதிழந்த
அளித்திரோ ஆளியீரோ

ஆண்டுவந்த பார் நும்மொழிப்படி
யவர்க்கு
அளித்திரோ ஆளியீரோ

என்று கேட்டுவிட்டார்கள். இப்படித் தூதுவிடுதலை முதலிற்பிரேரித்தவர் தர்மபுத்திரரே. இதற்கு மிகவும் சினந்துபேசிய வீமசேனன், அவரால் சமாதானம் செய்யப்பட்டபோது

அரவுயர்த்தோன் கொடுமையினும்
முரசுயர்த்தோய்
உனதருளுக் கஞ்சினேனே

என்று வெறுப்புடன் சாந்தமடைந்தான் என்பர். முடிவில் அவதாரமூர்த்தியான கண்ணபிரானே எழுந்தருளித் தூது மொழிந்தும் ஒருகோற்குத்து நிலமுங்கொடேன் என்று துரியோதனன் மறுத்ததோடு அப்பெருமானுக்கு அவமதிப்பு விளைத்தும் அனுப்பிவிட்டனன். ஆகவே, பெரும்பகை முற்றிப் போரும் மூண்டது. மூண்டது முதலே, எதிர்ப்பக்கத்திலிருந்த பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களிடம் பாண்டவர்கள் எவ்வளவு கௌரவமாக நடந்துகொண்டார்கள் என்பதும், அறநெறி தவறாத அந்த ஐவர்களிடமும் அம்மேன்மக்களின் அன்பும் மரியாதையுங் காட்டிய அழகும் வில்லிபுத்தூரார் வாக்கில மேமபட விளங்குகின்றன. அவர்களிடம் மட்டுமன்று, தன்னை இளமை முதலே வெறுத்துப் பகைமை காட்டி வந்த கன்னன், போரிடையே ஒரு சமயம் சோர்ந்து நின்றபோது—

அன்று போர்புரி சேனையின்பதி
யான வீரனை நீ இன்று போயினி
நாளைவா என இனிதியம்பினனால்

என்று அவனிடமும் அன்பு காட்டினன் அருச்சுனன். இத்தகைய மறக்கருணை போனறதையே—

அறத்திற்கே யன்புசார்பென்ப
வறியார்
மறத்திற்கு மஃதே துணை,

என்று வள்ளுவனாரும் குறிப்பிட்டார். அன்பு அல்லது கருணையாவது அறத்திற்கே சார்பானது என்பர். இது அறியாமையாம். இது வீரமாகிய மறத்திற்குஞ் சார்பாய் அதனைச் சிறப்பிப்பது என்பது கருத்து. (வரும்.)

திருச்சி. 26—5—43

## கடிதம்

இந்துசாதனப் பத்திராசிரியர்
அவர்கட்கு:

ஐயா!

வேலணைத்தீவு புங்குடுதீவு வாசிகளின் நன்மைகருதி பண்ணையிலிருந்து வேலணைக்கு முன் இரு மோட்டார் இரதங்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் அக்காலத்தில் பண்ணை ஆய நடைமுறை ஒழுங்கீனமாயிருந்ததால் (பிரயாணிகள் அதிகமாய் இராமையினால) அவ்விரு மோட்டோர் இரதங்களும் ஓரளவில் போதுமானதாயிருந்தன. ஆனால் இப்போதோ பண்ணை ஆயகிர்வாகத்தை ஐக்கிய சங்கம் ஏற்று மெச்சத்தகுந்த முறையில் நடாத்துவதால் ஏராளமான மக்கள் பிரயாணம் செய்து வருகின்றார்கள். ஆனால் மோட்டார் இரதங்களில் ஒன்று மாத்திரம்தான் ஓடுகின்றது. இதனால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமுறுகின்றார்கள். ஒரு துன்பம்தீர இன்னொரு துன்பம் எதிர்வந்த மாதிரியாய் வந்துவிட்டது. தூரம் அதிகமானதால் கால் நடைப் பிரயாணமும் செய்யமுடியாது. ஒரு நோயாளியைக் கொண்டுபோனால் அவனை மோட்டார் இரதத்தில் மிகுந்த சிரமத்துடன் தான் கொண்டுபோக வேண்டியிருக்கிறது.

ஆதலால் போக்குவரவுப்பகுதி அதிகாரிகள் இதைத் தயைகூர்ந்து கவனித்து இதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செதியில் செய்யும்படி வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

M. K. பேரம்பலம்,
வேலணை.




சிறுபிள்ளை வைத்தியத்திலும்
ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற
சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

## யாழ்ப்பாணம் தீவுப்பகுதி ஐக்கிய மோட்டார் வள்ளச் சங்கம், நயினாதீவு உற்சவம்

மேற்படி சங்கத்தாரால் நடாத்தப்படும் மோட்டார் வள்ளங்கள் திருத்தஞ் செய்வதற்காக நிறுத்தப்பட்டபடியால் போக்குவரவு சிறிதுகாலத்திற்கு நிறுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது போக்குவரவு தொடர்ந்து நடத்தப்படுகிறது. நயினாதீவு திருவிழாவிற்காக வள்ளங்கள் (13-7.43) 6.ந் திருநாள் தொடக்கம் ஊர்காவற்றுறைக்கும் நயினாதீவுக்குமிடையில் பகல், இரவு ஆகியநேரங்களில் போக்குவரவு நடைபெறுமென்பதை யாத்திரிகர்கட்கு இதன்மூலம் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

பிரயாண விகிதம்: ஊர்காவற்றுறை—நயினாதீவு 1.ம் வகுப்பு 1-50, 2.ம் வகுப்பு 1.00
நயினாதீவு—ஊர்காவற்றுறை 1.ம் வகுப்பு 1.00 2.ம் வகுப்பு 75.

வி. கார்த்திகேசு, மனேஜர்,
மோட்டர்வள்ளங்கள்.

(Mis. 75. 8 & 12-7.43)

குறைந்த விலையில் துணிகள்
வேஷ்டிதுணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y. 9 4-3-42—3-3-44


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'புறாக்களைச் சுட்டுக் கொல்லாதீர்'

### உயிரைக் காப்பாற்றப் பறந்து செல்லும் பறவைகள்

### வேட்டைக் காரர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அந்தப்புறாவை விட்டுவிடுங்கள்! அந்தப் புறா ராயல் விமானப்படையைச் சேர்ந்த ஒருவிமானியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பறப்பதாக இருக்கலாம். மனித சஞ்சாரமற்ற ஒரு இடத்தில் இறங்க நேர்ந்த ஒரு விமானி தனக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது அதைவிட முக்கியமான மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளவோ அவர் அந்தப் புறாவின் உதவியை நாடியிருக்கலாம்.

சாதாரண புறா ஒன்றையும் ராணுவத்தினரால் பயிற்றப்பட்ட ஒரு புறாவையும் பிரித்தறிவது வேட்டையாடும் ஒருவருக்குக் கஷ்டமாக இருப்பதனால் புறாக்களைச் சுட்டுக் கொல்லவேண்டாமென்று வேட்டைக்காரர்கள் வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

"க்ஷணநேரம் யோசனை செய்யாத காரணத்தினால் ஒரு வேட்டைக்காரர் தன் கண்ணுக்குப்படும் ஒரு புறாவைச் சுட்டுக்கொல்கிறார். அந்தப்புறா இத்தேசத்தின் எங்கோ ஓரிடத்தில் வந்திறங்கிய நமது விமானியின் உயிரைக் காப்பாற்றப் பறந்து கொண்டிருக்கிறது. ஆதலால் உங்களுடைய கவலையீனம் காரணமாக அந்தவிமானி உயிரிழக்க நேரிடுகிறது."

நேற்றிரவு வெளியிடப்பட்ட ஒரு வேண்டுகோளில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வேண்டுகோள் மேலும் கூறுவதாவது:-

சங்கடமாக இறங்கிய விமானிகள் தங்களுடைய நிலைமையைத் தங்கள் தளத்துக்கு அறியப்படுத்துவதற்காகப் புறாக்களின் மூலம் தூது விடுவது வழக்கம். தனது தூதை நிறைவேற்றுவதற்காக வாயுமண்டலத்தில் துரிதமாகப் பறந்துசெல்லும் இந்தப் பறவையைக் குறிப்பிசகாது சுடக்கூடிய வேட்டைக்காரர் தமது துப்பாக்கியால் சுட்டுவிடலாம்.

நிலத்திலிருந்து சுமார் 150 முதல் 200 அடி உயரத்தில பறப்பதைக் கொண்டும் அதன் பார்வை நேராக இருப்பதைக் கொண்டும் அதன் சிறகுகள் துரிதமாக அடிக்கப்படுவதைக் கொண்டும் அந்தப்புறா ஒரு அவசர வேலையாகப் போய்க்கொண்டிருக்கிறதென்பதை நாம் அறியலாம்; கறுப்பும் வெள்ளையும் கலந்த ஒரு நூதனநிறமாக அந்தத் தூதுப் புறா இருக்கும்.

'தனிப்பறவையைச்சுடாதீர்கள்!'

சாதாரணமாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் காணப்படும் புறாக்கள் தங்களுடைய சிறகுகளை மெதுவாகவே அடித்துக்கொண்டு செல்லும். ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு அவைகள் நேராகப் பறந்து செல்வது மிக அரிது. தூதுப்புறா சாதாரண புறாவைவிட பருமனில் சிறியது. அது ஒரு மைனாவை விடச் சற்றுப்பெரியதாக இருக்கும்.

எப்படியிருப்பினும் இந்தப்புறாக்களைப் பிரித்தறிவது வேட்டைக்காரர்களுக்குக் கஷ்டமாகவே இருக்கும். ஆகையால் "தனியாகப் பறந்துசெல்லும் புறாவைச் சுடாதீர்கள்!" என்ற பொன்மொழியை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒரு தூதுப்புறா காயப்பட்டோ அல்லது இறந்தோ அல்லது உயிரோடோ இருக்கும் நிலையில் யாராவது எங்காவது காணநேரிடின், அதனை அது தூக்கிச்செல்லும் கடிதத்துடன் அருகே யிருக்கும் பொலிஸ் டேஷனுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்குமாறு பொதுஜனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

## இங்கிலாந்தில் இறங்கிய ஜெர்மன் அதிகாரி?

நியூயார்க் யூலை 8—

மேஜர் 'எக்ஸ் என்னும் ஜெர்மன் அதிகாரியொருவர் ஜெர்மன் கூட்டு நடவடிக்கைகளுக்காக வேவு பார்க்கும்பொருட்டு யுத்தம் ஆரம்பித்த பிறகு ஏழுமுறை இங்கிலாந்துக்குப் போய்விட்டு வந்திருக்கிறாரென்று ஸ்டாக்ஹோம் பத்திரிகை யொன்றின் பர்லின் நிருபர் கூறுகிறார். பிரஸ்தாப ஜெர்மன் அதிகாரி நீர்மூழ்கி மோட்டார்ப் படகு பாரசூட் ஆகியவைகள் வழியாக இங்கிலாந்தில் இறங்கினாரென்று சொல்லப்படுகிறது.

## பிரதோஷ விரத மான்மியம்

2ம் பக்கத் தொடர்ச்சி

ஒருங்கு அமையப்பெற்றவள், தன்னையகனை ஒருஆண்டிற்கு முந்தியிழந்தமையினாலே கைம்மையொழுக்கம் பூண்டுள்ளவள், வறுமைப்பட்டவள் உமையென்னும் பெயருடைய ஒரு பார்ப்பனமகள் தான் பெற்ற ஓராட்டைச் சிறுவனையும் ஒக்கலையில் வைத்துக் கரத்தால் அணைத்தபடி அத்தடாகக் கரைமார்க்கமாக வந்தாள். வந்தவள் அப்பசுங்குழவியின் அழுகையொலியைக்கேட்டுச் சமீபத்திற் போய்ப்பார்த்தாள்; வெறுந் தரையிலே ஓருபசுங்குழவி பாலசூரியனைப்போற்கிடந்து அழுவதைக் கண்டாள்; திடுக்குற்றாள், ஏங்கினாள், பயந்தாள், பரிதபித்தாள். ஒருவாறு மனந்தேறினாள்; அப்பிள்ளையை உற்று நோக்கினாள்; "ஐயோ, இது என்ன விபரீதம்! இக்குழந்தையைப் பெற்றவளைக் காணேமே" என்று நாற்புறமும் பார்த்தாள்; எவரையுங் கண்டிலள், கலங்கினாள்; "இந்தச் சிசுவைப் பெற்றவள் என்போன்ற பார்ப்பனமகளோ? இல்லையேல் அரசவம்சத்தவளோ? அந்த இரண்டு வருணத்தில் ஏதும் ஒரு வருணத்திற்குரிய பிள்ளைபோலவே இக்குழந்தை காணப்படுகிறது. இக்குழந்தையையும் நான் இப்பொழுதே எடுத்துக்கொண்டு போய்ப் பாலூட்டி என்பிள்ளைக்குத் தம்பியெனவும் துணையெனவும் வளர்க்கலாம்; ஆனால்எம்வருணத்துப் பிள்ளையல்லாவிட்டால் என் சுற்றத்தவர் இப்பிள்ளையை நான் வைத்து வளர்க்க, என்னை விடமாட்டார்களே; புறக்கணிப்பார்களே; இக்குழந்தையைப் பெற்றவளுக்கு, பெற்றவுடனே ஏதோ ஆபத்து நேர்ந்திருத்தல் வேண்டும்; இல்லையேல் இச்சிசுவைவிட்டுப் போக என்மனஞ் சகியாதபோது தாய் மனமா சகிக்கும்! ஐயோ! இதற்கென்ன செய்வேன்" என்று அந்த உமையெனப்படும் பிராமணப் பெண், குழந்தையை எடுத்துப் போதற்கும் விடுத்துப் போதற்கும் மனம் எழாதவளாய் இருதலைக் கொள்ளியினுள் எறும்பு போல நின்று இடர்ப்பட்டாள். (வரும்)

## இந்தியர்வுடன் மீண்டும் சமாசப் பேச்சுகள்

### ஆரம்பிக்கும்படி பிருத்தானிய புகைரதத் தொழிலாளரின் வற்புறுத்து

லண்டன் யூன் 7—

'காமன் வெல்த் என்னும் புதிய பிரிட்டிஷ்கட்சி தயாரித்திருக்கும் யுத்தகால அறிக்கையில் காணப்படும் அநேக கோரிக்கைகளில் இந்தியாவுக்கு உடனே சுதந்திரம்வழங்கப்படவேண்டுமென்னும் கோரிக்கையும் ஒன்றாகும்.

கார்லிஸைல் என்னுமிடத்தில் நடந்த பிருத்தானிய புகைரதத் தொழிலாளர் தேசிய யூனியனின் மகாநாடு 'இந்தியாவில் தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்காக இந்திய தேசியப் பிரதிநிதிகளுடன் உடனே சமாஸப் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டுமென்று பிருத்தானிய அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

குறித்த தீர்மானம்பற்றி மகாநாட்டில் விவாதம் நடைபெற்றபொழுது ஒரு பிரதிநிதி தற்போதைய யுத்தத்தின்போது இந்தியாவுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டுமென்று கூறினார். இந்தியாவில் தேசிய அரசாங்கமொன்றை நிறுவி பாஸிஸத்தை எதிர்க்கும் இப்போராட்டத்தில் 39 கோடி மக்களின ஆதரவைப் பெறுவது ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை நசுக்கப் பேருதவியாக இருக்குமென்று மற்றொரு பிரதிநிதி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு சுயாட்சி வழங்குவதற்குச் சாதகமாக தொழிலாளர் ஸ்தாபனங்கள் கிளர்ச்சிசெய்ய வேண்டுமென்று திரு. ஜே. ரைன்ட் என்பவர் கூறினார்.

## மகாத்மாஜி குமாரர்மீது வழக்கு

### 2000 பவுன் மானநஷ்டக் கோரிக்கை

டர்பன் யூலை 6—

செவ்வாய்க்கிழமையன்று ஸுப்ரீம் கோர்ட்டில 2000 பவுன் மானநஷ்டத்தைக் கோரிய வழக்கு விசாரணை ஆரம்பித்தது. டிரான்ஸ்வால் இந்தியக் காங்கிரஸ் காரியதரிசியான ஜனுப் எஸ். எம். நானு, 'இந்தியன ஒபினியன்' என்ற பத்திரிகையின சொந்தக்காரரும் மகாத்மா காந்திஜியின் புத்திரருமான ஸ்ரீ மணிலால் மோஹனதாஸ் காந்தி மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்.

'டிரான்ஸவால குழப்பம' டிரான்ஸ்வால் இந்தியக் காங்கிரஸ் தேர்தல் என்ற மகுடங்களுடன் எழுதப்பட்ட வியாசங்களே குற்றத்திற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. மேற் குறிப்பிடப்பட்ட இரு வியாசங்களும இவ்வருஷம் ஜனவரி மீ 21ந் தேதியும 29ந் தேதியும் வெளியாயின. ஸ்ரீ காந்தி தாமே தமது வாழ்க்கை நடத்துகிறார். சு.மி.

## கொழும்பு விவேகானந்த சபை

நிகழும் சுபானு ஹூ ஆனி மீ 22ந் திகதி (6—7—43) செவ்வாய்க்கிழமை மாலை 6-15 மணியளவில் மேட்டுத்தெருவிலுள்ள கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெற்றது. அத்தருணம் திரு. வே. மயில்வாகனமவர்கள் சுவாமிகளது சரித்திரத்தையும் அவர் அருளிய திருமுறைகளையும் குறித்து ... சொற்பொழிவாற்றினர். ... சபையிற கூடி யிருந்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டதும இரவு 8 மணியளவிற் கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

—கடித.

## திருப்பாணாழ்வார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ளிலும் பாணரைப்பற்றிய செய்திகள் பரக்கக் காணப்படும். அவை இங்கு விரிப்பிற் பெருகும், விரிவஞ்சி விடுக்குதும். யாழ்ப்பாணர் மன்போர், யாழினைக் கருவியாகக் கொண்டு இசைபாடி வாழ்ந்து வருவோர் ஆவர். அக்காலத்திலிருந்த பண்டைத் தமிழரசர்கள் பாணர்களை நன்கு பாதுகாத்து, அவர்கள் வழியாக தமிழ்மொழியின் இன்னிசையை நுகர்ந்தும் பாதுகாத்தும் வந்தார்கள். அதனை அவர்கள் தங்கள் முதற்கடனாகக் கொண்டிருந்தார்கள். பின்பு சிற்றரசர்கள், ஜமீன்தார்கள்; பிரபல குடும்பத்தைச் சார்ந்த செல்வர்கள் ஒரோவகையில் அழியவிடாது பாதுகாத்து வந்தார்கள். இவ்வுலகிலுள்ள அண்டகோடி சராசரங்கள் யாவற்றையும் தன்வயப்படுத்தித் கல்லையும் உருகச்செய்யும் இன்னிசையானது தனது பண்டைப்பெருமையும், இனிமையும் வளனும் குன்றித் தளர்ந்து வாடி மூலை முடக்குகளில் ஒருசிலரால ஓரளவுக்குப் போற்றப்பட்டு இப்பொழுது வருகின்றது. இது மிகவும் வருந்தத் தக்கதொன்றாம். இதனைப் பண்டை உன்னத நிலைமையில் நிறுத்துதல் தமிழ்மக்களில் இருசெல்வமும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவர் கடனாம்,

சைவசமய ஆசிரியர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கர் முதலிய பெரியோர்கள் முறையே "பண்ணினிசையாகி நின்றாய் போற்றி" எனவும், "ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்" எனவும், "பண்ணொடு பாடல் வல்லார்கள் பழியொடு பாவம் இலரே" எனவும், "இன்னிசை வீணையிலிசைத்தோன் காண்க" எனவும், இறைவனுக்கும் இன்னிசைக்குமுள்ள தொடர்பை எடுத்துக் கூறியுள்ளார்கள். "எங்குள உயிரும் இன்பம் நிறைந்தாட நாடகவிதியோடாடிய" சிவன் சாமகானப் பிரியனென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்ததொன்றாம்.

"ஆடலும் பாடலும் ஆண்டவனிடத்து மனத்தினைச் செலுத்தி உள்ளத்துக்கு உயர்வினைத் தருதல் போலக், காமவின்பத்தில் மனதினைக்கொண்டுசென்று ஆண்டவனை மறப்பிக்கும் இயல்புடையன. சிற்றின்பம், பேரின்பம் என்னும் இருபகுதிக்கும் இசையே காரணமாக அமைந்து நின்றது. தேவாரத்திலும் திருவாய்மொழியிலும் இயைந்து நின்ற இன்னிசையானது தேவகானமாய் மனத்தினை இறைவன்பாற் செலுத்தும் நீர்மையது. இதெய்வப் பாடல்களைப் பெரியோர் திருவாய்மலர்ந்தருளிய காலத்திலே அவை தமக்குப் பொருந்திய இசைமரபினைப் பிற்காலத்தார் மறந்து போயினர் என்று சுவாமி விபுலானந்த அடிகள் கூறிய திருமொழிகள் இங்கு பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாலதாம். அன்பர்களே! பெரியகோயிலில் திருக்கண் வளர்ந்தருளும் கருமணியைக் கண்ணாரக்கண்டுகொண்டு நின்று வாயார வாழ்த்தித் திருப்பாணாழ்வாரைப்போல, யாமும் இறைவனை இன்னிசையால் பாடி பிறப்பினை யொழித்து முத்தியடையும் வழியில் முயல்வோமாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடிதம்

இந்துசாதனப் பத்திராதிபரவர்கட்கு, எனது சிற்றறிவிற் கெட்டிய சில யோசனைகளை இக் கடிதத்தில் எழுதியனுப்புகின்றேன்.

ஐயா!

இப்பொழுது யாழ்ப்பாணப் பகுதிக்கு அரிசி விநியோகஞ் செய்யும் முறை மற்றும் இடங்களிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணப்பகுதி வியாபாரிகட்குச் சிலநாளாக பச்சை அரிசியும், காங்கேசன்துறை, பருத்தித்துறை வியாபாரிகளுக்கு சம்பா, நேரஸ் அரிசி வகைகளுமாக அதிகாரிகளால் விநியோகஞ் செய்யப்பட்டு வருகின்றது. தெல்லிப்பழை முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகள் அவ்விடங்களிலுள்ள மொத்த வியாபாரிகளிடம் அரிசி எடுப்பதன்றி யாழ்ப்பாணத்திலுள்ள சில மொத்த வியாபாரிகளிடத்தும் ஒருசிலர் அரிசி யெடுத்து வருகின்றனர். இவ்விதம் ஒரே இடத்திலுள்ள வியாபாரிகள் இவ்விரு பகுதிகளிலும் அரிசி யெடுத்து வருவதனாலே, எடுக்கும் அரிசி வித்தியாசமாகக் காணப்படுகின்றது. ஒரே இடத்திலுள்ள பல வியாபாரிகள் பல்வகையாக விநியோகஞ்செய்து வருவதனாலே பொதுசனங்கட்கிடையிலும் சில்லறை வியாபாரிகட்கிடையிலும் பிணக்குகள் ஏற்பட்டுவிடுகின்றன.

ஆகையினாலே இது விஷயத்தை மேலதிகாரிகட்கு அறிவித்து, எல்லா இடங்களிலும் ஒரேவகையாக அரிசியை விநியோகஞ் செய்யச் செய்து, பொதுசனங்களினதும் வியாபாரிகளினதும் பிணக்குகளை நீக்கி, அரசாங்கத்தார் எல்லாப் பொதுசனங்களையும் ஒப்பநோக்கும் வகை செய்வீர்களென ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

இது விஷயத்தை நன்கு உணர்ந்து, சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்துப் பொதுசனங்களறியும் வகை உங்களிதழில் வெளிப்படுத்துவதோடு, மேலதிகாரிகளையும் நன்கு உணரச்செய்து பொதுசனங்களின் இருவகையான வயிற்றுக் கொடுமையும் நீங்கும்வகை செய்யும் வண்ணம் மேலும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவிடங்கட்கும் ஒரேவிதமாக விநியோகஞ் செய்துவரின் பொதுசனங்களின் கஷ்டத்தைச் சிறிது நீக்குவதாக இருக்கும். அவ்வவ்விடங்களிலுள்ள தலைமைக்காரர்களும் (இது விஷயத்தில) எல்லாக் கடைகளிலும் ஒரேவிதமாக அரிசி விநியோகஞ் செய்யப்பட்டு வருகின்றதா வென்பதனை இடைக்கிடை பரிசோதித்துவரல் வேண்டும்.

மேலும் விநியோக அதிகாரிகள் தங்கள தங்கள் வசதிகளைக் கவனிக்கின்றார்களே யொழிய, பொதுசனங்களின் வியாபாரிகளின் கஷ்டத்தை வசதியை உணர்கின்றார்களில்லை. இது விஷயத்தையும் தாங்கள் உணர்ந்து ஆகவேண்டியவற்றைக் கையாளுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
மு. குமாரசாமி

## சைவப் பிரசங்கம்

யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டத்தி னாதரவில் நிகழும் ஆனி மாதம் ௩௨-ந் திகதி (16-7 43) வெள்ளிக் கிழமை மாலை ஆறு மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நிலையத்திலே சைவத் திருவாளர் சு. நடேசபிள்ளை B. A., L. T., F. R. E. S, M. S. C., அவர்கள் தலைமை வகித்து "சைவத்திருமுறை" என்னும் விஷயமாக ஓர் சிறந்த பிரசங்கம் செய்வார்களென்றும், அதன்பின் திருவாளர் சி. முருகேசு அவர்கள் "சைவசாதனங்கள்" என்னும் விஷயமாகச் சொற்பொழிவு ஆற்றுவார்களென்றும் அறியலானோம்.

## ஜப்பானிய கடற்படைக்குப் பெருந்தோல்வி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் இருப்பதால் நேச விமானங்கள் அவர்களை ஆகாயத்தில் கவிழ்த்துகொள்ளும் காள் வெகு தூரத்தில் இல்லையென்று தென்பசிபிக் யுத்தப் பிராந்தியத்திலிருந்து 'நியூயோர்க்டைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் எழுதுகிறார்.

## இன்றைய இந்தியாவை நன்கறிந்தவர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனும் நேச தேசங்களும் போராடும் லட்சியத்துக்கு இந்திய பொதுஜனங்களிந் பெரும்பாலோர் ஆதரவளிக்கவில்லையென்றெண்ணுவது தவறாகும். யுத்த முயற்சிக்கு உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் அவர்கள் ஆதரவளித்து வருகிறார்கள். அதன் பயன் அபாரமானதாக இருக்கிறது.

வைஸ்ராயாக நியமிக்கப்பட்டிருக்கும் வைகௌண்ட் வேவல் சங்கத்தின் அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

## வண்ணை கோம்பையன் மணல் மயான பரிபாலன சபை

இச்சபையின் பதினோராவது வருடாந்தக்கூட்டம் நிகழும் 1943ம் ஆ௵ ஆடிமீ 17ந்உ சனிக்கிழமை சாயந்தரம் 5 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமெனவும், அக்கூட்டத்தில் (1) சென்றகூட்ட வரலாறு வாசித்தல, (2) பதினோராவது ஆண்டின் அறிக்கையைப் படித்தல், (3) வரவு செலவுக் கணக்கை வாசித்தல (4) உத்தியோகஸ்தர் தெரிவு, (5) சில நிர்ணயங்கள் நிகழுமெனவும் மேற்படி சபை இணைக்காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் யூலை 13

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலை கீதம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு

மாலை 5 ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 5.45 இசைப்பயிற்சி 6 திருக்கோடிகாவல் ஆர் கோவிந்தராஜபிள்ளை பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கடை திறப்பு இசைநாடகம் 8 மதராஸில் உள்ளபடி (கே எஸ் நாராயண ஐயர் கோட்டுவாத்தியம்) 9-15 எம் எஸ் சுப்புலக்ஷமி† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல், கிளாரினெட் 10 இசை வேளை† 10-30 முடிவு.

### புதன் யூலை 14

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸி எஸ் சிவராமகிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஸி எஸ் சிவராமகிருஷ்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 வாகூர் முத்துச்சாமி ஐயர் வயலின் 5.45 இசைப்பயிற்சி 6 தஞ்சாவூர் சீதாலக்ஷ்மி அம்மாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அச்சுக் தூல் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 படபபாட்டுகள்† 8 வாகூர் முத்துச்சாமி ஐயர் வயலின் 8-30 அமெரிக்க வாத்த (டெல்லி அஞ்சல்) 8-45 தஞ்சாவூர் சீதாலக்ஷ்மி அம்மாள் பாட்டு -9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கோட்டு வாத்தியம், வீணை 10 மதராஸில்உள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் யூலை 15

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஆர் தங்கவேலு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஆழியூர் என் துஞ்சுமணி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஆழியூர் என் துஞ்சுமணி புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 கே ஆர் தங்கவேலு பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி தூலிசையுடன் 8 கே பி சுந்தராம்பாள் பாட்டு 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



# பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதந் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

| | | | |
|---|---|---|---|
| இந்துசாதனம் தமிழ்ப்பிரதி, | வருடமொன்றிற்கு | பட்டின எல்லையுள் | 6.50 |
| ,, ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 6.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 10.50 |
| தமிழ்ப்பிரதி | ,, | பிறவூர்கட்கு | 9.50 |
| ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 9.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 13.50 |

**தனிப்பிரதி 7 சதம்**


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 12, July, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org